*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*29 08-2025 FRIDAY 6.30 PM*
*மாநிலச் செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. உலக அமைதிக்கு இந்தியா - ஜப்பான் இடையேயான ஒத்துழைப்பு அவசியமாகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் கொட்டப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
3. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளின்போது மாநிலங்களின் வருவாய் பாதுகாக்கப்படுவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
4. நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
5. ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

***இனி விரிவான செய்திகள் –***

<<<<<<>>>>>>

உலக அமைதிக்கு இந்தியா - ஜப்பான் இடையேயான ஒத்துழைப்பு அவசியமாகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
இன்று டோக்கியோவில் நடைபெற்ற இந்தியா – ஜப்பான் இடையேயான 15-ஆவது உச்சிமாநாட்டில் பங்கேற்ற பின்னர் ஜப்பான் பிரதமர் திரு Shigeru Ishiba-ருடன் இணைந்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.
இந்த பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையே அடுத்த பத்தாண்டுகளுக்கான தொலைநோக்கு ஒத்துழைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லி ஐ ஐ டி-யில் இன்று நடைபெற்ற தொழில்நுட்ப திருவிழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியம் 120 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

6-ஜி தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<<<>>>>>>

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் கொட்டப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் ஆற்றில் கொட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசின் திட்டங்களுக்கு விதவிதமாக பெயர் வைப்பதையும், விளம்பரம் செய்வதையும் முதன்மை நோக்கமாக கொண்டவர்கள் குறைந்தபட்சம் அதற்கு செலவு செய்த மக்கள் வரிப்பணத்தை நலத்திட்டங்களுக்கு வழங்கியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா என்று வினவியுள்ளார்.

மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆற்றில் எறிந்துவிட்டு முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நாளை ஜெர்மனி செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் குறைகளை வைகை ஆற்றில் மிதக்க விடுவதுதான் திமுக அரசின் லட்சியமா என்றும் கேள்வி எழுப்பியுள்ள டாக்டர் எல். முருகன், இதற்கு சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியும் திமுக அரசின் இந்த செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களை திமுக அரசு உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் கல்லூரிகளில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு கடந்த மூன்று மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் திமுக அரசு உடனடியாக தலையிட்டு, உரிய தீர்வினை காண வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிடும் தமிழகத்தை சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு அனைத்துக்கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைவரும் போற்றக்கூடிய வகையில் செயல்படக்கூடியவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் என்று கூறினார்.

தமிழகத்தில் கனிம வள கொள்ளை அதிகரித்துள்ளதாகவும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளின்போது மாநிலங்களின் வருவாய் பாதுகாக்கப்படுவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசு முன்மொழிந்துள்ள சீர்திருத்த நடவடிக்கைகளை தமிழக அரசு வரவேற்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில வருவாயை பாதிக்காத வகையில் இவை அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வரி குறைப்பின் பயன்கள் மக்களை சென்றடைய வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

*அரசுப்பள்ளி மாணவர்கள் சென்னை ஐ ஐ டி-யில் பயில்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.*

*சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

<<<<<<>>>>>>

*நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*
*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

<<<<<<>>>>>>

***<u>மாவட்டச் செய்திகள்</u>***

*திருவள்ளூர் மாவட்டம் ஐயப்பாக்கம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காவல் நிலையத்தை மாநில அமைச்சர் திரு நாசர் இன்று திறந்து வைத்தார்.*

-----------------

*திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழரின் மரபு, பண்பாட்டை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் வகையிலான "தமிழ் கனவு" நிகழ்ச்சியில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று வழங்கினார்.*

-----------------

*நாமக்கல் மாவட்டத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.*

-----------------

*மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.*

-----------------

*வேலூரில் கண்தானம் குறித்த மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச்செய்திகள்</u>***

*ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.*
*பீகாரின் Rajgir-ல் நடைபெற்ற இப்போட்டியில் ஹர்மன் பிரீத் சிங் மூன்று கோல் அடித்தார்.*
*முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் ஜப்பான் 3-0 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தானையும், கொரியா 7-0 என்ற கோல் கணக்கில் சீன தைபே-யையும் மலேசியா 4-1 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷையும் வென்றன.*

-------------

*ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*
*கஸகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Ankur Mittal தங்கப்பதக்கம் வென்றார்.*
*மகளிர் 50 மீட்டர் பிரிவில் Manini Kaushik வெண்கலப்பதக்கம் வென்றார்.*
*இதன் குழு பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*
*இப்போட்டியில் இந்தியா இதுவரை 45 தங்கம், 20 வெள்ளி, 18 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.*

-------------

*காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sairaj Pardeshi தங்கப்பதக்கம் வென்றார்.*
*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஜுனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*-------------*

*ஆசியகோப்பை சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*
*தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் 3 கிலோமீட்டர் பிரிவில் Harshita Jakhar தங்கப்பதக்கம் வென்றார்.*
*மற்றொரு பிரிவில் அவர் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.*
*ஆடவர் ஒரு கிலோ மீட்டர் சீனியர் பிரிவில் ரொனால்டோவும் மற்றும் ஜுனியர் பிரிவில் ஆதித்யாவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

*-------------*

*சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Chahat, Himanshi, Udan Singh உட்பட 15 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.*

*------------*

*CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா இன்று தஜிகிஸ்தானை எதிர்கொள்கிறது.*
*தஜிகிஸ்தானில் நடைபெறவுள்ள இப்போட்டி, இன்றிரவு ஒன்பது மணிக்கு தொடங்குகிறது.*

*------------------*

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா – நேபாளம் இடையேயான ஆட்டம் தற்போது பூட்டானில் நடைபெற்று வருகிறது.*

*<<<<<<<END>>>>>>*